Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 207 of 2024

DATE : 03.06.2025

Depositions of witness for Prosecution

PW : 2

| Name | ரேணுகாந்த் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of June 2025

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

1) நான் தற்போது தற்காலிக பணிநீக்கத்தில் இருந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது 23.04.2020ம் தேதி சுமார் காலை 8மணியை போல மதுவிலக்கு ரோந்து பணிக்காக ஆய்வாளர் பானுமதி, சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்புராஜ், தலைமை காவலர் பூபதி, அ.சா.1 மற்றும் நானும் ஆகியோர்கள் சென்றோம். அப்போது ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் கவுண்டடப்பட்டிக்கு வடக்கேயுள்ள பாடிகாப்பான் கண்மாயில் கள்ளச்சாராயம் ஊறல் போட்டிருப்பதாக தகவல் கிடைக்க பெற்றது. நாங்கள் அங்கே சென்ற போது 4 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு ஆட்டோ நின்று கொண்டிருந்தது. 4 நபர்கள் தப்பி ஓட முயன்ற போது முருகன் என்பவரை பிடித்துவிட்டோம். மீதி நபர்கள் வடக்கு நோக்கி தப்பிவிட்டார்கள். முருகனை பிடித்து விசாரணை செய்த போது முன்னுக்கு பின்னாக பதிலளித்தவரை விசாரித்ததில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்காக ஊறல் போட்டிருப்பதாக ஒப்புக்கொண்டார். ஊறல் எங்கே போடப்பட்டிருந்தது என்று கேட்டதற்கு ஒரு கிணற்றிற்கு கிழக்கேயுள்ள புதரில் போடப்பட்டிருப்பதாக சொன்னார். 6 மண்பானைகளில் ஊறல் போடப்பட்டிருந்தது. மேலும் வெள்ளை நிற கேனில் காய்ச்சிய சாராயம் இருந்தது மற்றும் ஊறல் போட்டுவதற்கு பயன்படுத்திய அலுமினிய பானை மற்றும் அலுமினிய குண்டா சட்டி ஆகியவற்றை எடுத்து ஒப்படைத்தார். கேனில் வித்தியாசமான நறுமணம் வீசியதால் முருகனிடம் விசாரித்ததில் போதை அதிகமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏதோ கலந்திருப்பதாக சொன்னார். ஆட்டோ எதற்காக வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு காய்ச்சிய சாராயங்களை எடுத்து விற்பனை செய்வதற்காக வைத்துள்ளோம்

என்று கூறினார். தப்பி ஓடிய மூன்று நபர்களின் விபரங்களை விசாரித்த போது காளிராஜ், சசிதரன், தமிழரன் என்று குறிப்பிட்டார். ஆஜர் 1ம் எதிரி சம்பவ இடத்தில் வைத்து தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து ஆட்டோ, அலுமினிய பானை, அலுமினிய குண்டா சட்டி ஆகியவற்றை கைப்பற்றினார். வெள்ளை நிற கேனில் இருந்த சாராயத்தில் இருந்து சோதனைக்காக 750 ML அளவு கொண்ட இரண்டு கொள்கலனில் ஆய்வாளர் எடுத்துக்கொண்டார். மண்பானையில் இருந்த ஊறலில் இருந்து சோதனைக்காக 2 கொள்கலனில் எடுத்துக்கொண்டார். மீதி இருந்த ஊறல்களையும் சம்பவ இடத்தில் வைத்து கொட்டி அழித்துவிட்டோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்து செய்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலில் ஆஜர் எதிரிகளை குறிப்பிட்டு சொன்னார்களா என்றால் பொதுவாக இமானுவேல்தெருவை சேர்ந்த நான்கு நபர்கள் என்று தான் தகவல் கிடைத்தது. ஓடைக்கும் கிணற்றிற்கும் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல சுமார் 300 மீட்டர் தூரம் தான் இருக்கும். வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட இடத்தின் உரிமையாளர் யார் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இடத்தின் உரிமையாளர் யார் என்பதை தெரிந்து கொள்ள வருவாய் துறை அதிகாரிகளை ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஓடைக்குள் வைத்து தயார் செய்த அத்தாட்சியில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை மூன்று பேரும் கையெழுத்து செய்தோம். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆட்டோவை 2 வது எதிரியின் வீட்டில் வைத்து தான் கைப்பற்றினோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் தோட்டத்தில் வைத்து அத்தாட்சியில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருந்தால் மேற்படி தோட்டத்தின் உரிமையாளர் யார் என்ற விபரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு